ஜனவரி – 27

# தேசியச் செய்திகள்

## ஊழல் கண்ணோட்ட அறிக்கை - 2019

- இந்த அறிக்கையானது 1995 ஆம் ஆண்டு முதலாக டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் (Transparency International) என்னும் நிறுவனத்தால் தயாரித்து வெளியிடப்படுகின்றது.
- 12 கணக்கெடுப்புகளிலிருந்து உலகெங்கிலும் உள்ள நாடுகளை வரிசைப் படுத்துகின்ற இது ஒரு கூட்டு அறிக்கையாகும்.
- இது பொதுத்துறை நிறுவனங்களில் ஏற்படும் ஊழலின் அளவுகளைப் பொறுத்து 180 நாடுகளையும் பிராந்தியங்களையும் வரிசைப்படுத்துகின்றது.
- இது பூஜ்ஜியத்திலிருந்து 100 வரையிலான அளவைப் பயன்படுத்துகின்றது. இதில் பூஜ்ஜியம் மிக அதிகமான ஊழல் நிறைந்ததாகவும் 100 ஊழலற்ற தன்மை கொண்டதாகவும் இருக்கும்.
- 2018 ஆம் ஆண்டில் 78வது இடத்திலிருந்த இந்தியாவானது தற்போது 41 மதிப்பெண்களுடன், 80வது இடத்தில் உள்ளது.
- இந்தத் தரத்தை சீனா, பெனின், கானா மற்றும் மொராக்கோவும் பகிர்ந்து கொள்கின்றன.
- டென்மார்க் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் முதலிடத்தையும், பின்லாந்து, சிங்கப்பூர், சுவீடன் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் முதல் பத்து இடங்களையும் பிடித்துள்ளன.




# சர்வதேசச் செய்திகள்

## ரோஹிங்கியா விவகாரம்

- ரோஹிங்கியா விவகாரம் குறித்து சர்வதேச நீதிமன்றமானது (International Court of Justice - ICJ) தனது தீர்ப்பை வழங்கியுள்ளது.
- நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பானது மியான்மரைக் கட்டுப்படுத்துகின்றது. மேலும் இந்தத் தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்ய முடியாது.

- இருப்பினும், இதனை நடைமுறைப்படுத்த வேறு எந்த வழியும் நீதிமன்றத்திற்கு கிடைக்க வில்லை.
- காம்பியா குடியரசு நாடானது மியான்மர் இனப்படுகொலை செய்ததாகக் குற்றம் சாட்டி 2019 ஆம் ஆண்டு நவம்பரில் ICJயில் அந்நாட்டின் மீது வழக்குத் தொடர்ந்தது.
- 57 உறுப்பு நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பானது (Organisation for Islamic Cooperation - OIC) காம்பியாவை ஆதரித்தது.
- மியான்மர் நாட்டினை நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகி பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- இதுவரை, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகளவில் மூன்று இனப் படுகொலை வழக்குகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை: கம்போடியா (1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதி), ருவாண்டா (1994) மற்றும் ஸ்ரேப்ரினிகா & போஸ்னியா (1995) ஆகியவை ஆகும்.
- மியான்மர் நாட்டின் கடலோரப் பகுதியான ரகைன் மாகாணத்தில் உள்ள ரோஹிங்கியா கிராமங்கள் மீது மியான்மர் இராணுவம் மிருகத்தனமான ஒடுக்குமுறையைத் தொடங்கியதில் 2017 ஆம் ஆண்டு முதல் இதுவரை 7.3 லட்சம் ரோஹிங்கியாக்கள் வங்க தேசத்துக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

*ICJ பற்றி*

- உலக நீதிமன்றம் என்று அழைக்கப்படும் சர்வதேச நீதிமன்றமானது ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மை நீதித்துறை ஆகும்.
- ICJ ஆனது நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கின்றது மற்றும் ஐ.நா. அமைப்பால் குறிப்பிடப்படும் சர்வதேசச் சட்ட சிக்கல்கள் குறித்து ஆலோசனைக் கருத்துக்களை வழங்குகின்றது.
- ஐ.நா. அமைப்பின் உறுப்பு நாடுகள் அனைத்தும் ICJயின் உறுப்பினர்களாகும்.
- ICJ இன் தலைமையிடமானது நெதர்லாந்தின் தி ஹேக்கில் உள்ள அமைதி அரண்மனையில் அமைந்துள்ளது. இது நியூயார்க் நகரில் அமையாத ஒரே ஐ. நா அமைப்பாகும்.
- இதன் அதிகாரப்பூர்வ அலுவலக மொழிகள் ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு ஆகியவை ஆகும்.
- ICJ ஆனது 15 நீதிபதிகள் கொண்ட குழுவைக் கொண்டுள்ளது.
- இந்த 15 பேரில், தல்வீர் பண்டாரி என்ற இந்தியர் 2012 ஆம் ஆண்டு முதலாக சர்வதேச நீதிமன்றத்தில் இந்திய உறுப்பினராக உள்ளார். இவர் இந்திய உச்ச நீதி மன்றத்தின் நீதிபதியாக இருந்துள்ளார்.
- இவரது பதவிக்காலம் ஆனது 2027 ஆம் ஆண்டில் முடிவடைகின்றது.

## சாகர்மாதா சம்பத் - ஏப்ரல் 2020

- இது நேபாள நாட்டின் முதலாவது பல நாட்டுப் பங்குதாரர்கள் பங்கேற்கும் ஒரு இராஜதந்திர முன்னெடுப்பாகும்.
- நவீன உலகில் உள்ள காலநிலை மாற்ற அச்சுறுத்தல் குறித்து இந்த நிகழ்வு கவனம் செலுத்த இருக்கின்றது.

## தட்டம்மைத் தடுப்பூசிகள்

- அண்மையில் மாலத்தீவில் அம்மை நோய் பரவுவதை சமாளிப்பதற்காக அந்நாட்டிற்கு

உதவுவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

- சமீபத்தில் மாலேயில் உள்ள இந்தியத் தூதரகமானது 30,000 அளவு கொண்ட தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசிகளை மாலத்தீவு சுகாதார அமைச்சகத்திடம் ஒப்படைத்து உள்ளது.
- உலக சுகாதார நிறுவனமானது "மாலத்தீவு - அம்மை நோய் இல்லாத நாடு" என்று அறிவித்த மூன்று ஆண்டுகளுக்குள் இந்த நோய்ப் பரவல் மீண்டும் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- உலகளாவியத் தடுப்பூசி செயல் திட்டத்தின் கீழ், தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோயானது 2020 ஆம் ஆண்டுக்குள் ஐந்து உலக சுகாதார நிறுவனப் பிராந்தியங்களில் அகற்றப்படுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- தட்டம்மையானது ஒரு வைரஸ் தொற்று நோயாகும்.
- பாதிக்கப்பட்ட நபர்களின் மூக்கு, வாய் அல்லது தொண்டையில் இருந்து வெளிப்படும் நீர்த்துளிகள் வழியாக இந்தத் தட்டம்மை பரவுகின்றது.
- ஜெர்மன் தட்டம்மை என்றும் அழைக்கப்படுகின்ற ரூபெல்லா தொற்றுநோயானது, பொதுவாக ஒரு லேசான வைரஸ் தொற்று ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## GATI வலைதளம்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தால் 'கேட்டி' (Gati) என்ற வலைதளமானது தொடங்கப்பட்டுள்ளது.
- இதை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (National Highways Authority of India (NHAI) உருவாக்கியுள்ளது.
- 'GATI' என்ற வலைதளத்தை NHAI இன் வலைதளத்திலிருந்து அணுகலாம். மேலும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சலுகையாளர்கள் இந்தத் தளத்தில் தங்களது திட்டம் தொடர்பான சந்தேகங்கள் / கேள்விகளுக்குத் தீர்வு பெற முடியும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## NavIC

- குவால்காம் டெக்னாலஜிஸ் நிறுவனமானது இந்தியப் பிராந்திய செயற்கைக்கோள் வழிசெலுத்தல் அமைப்பான NavIC (இந்தியச் செயற்கைக் கோள்களின் தொகுப்பு) அமைப்பு பயன்படுத்தும் விதமாக கைபேசிச் சில்லுகளை (சிப்செட்களை) உருவாக்கி உள்ளது.

*இது பற்றி*

- இது இந்தியப் பிராந்தியத்தில் உள்ள இந்திய நிலப்பரப்பைச் சுற்றி 1500 கி.மீ வரையிலான அமைவிடத் தகவல்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தன்னிச்சையான பிராந்திய வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பு ஆகும்.
- இந்தியப் பிராந்திய செயற்கைக்கோள் வழிகாட்டுதல் அமைப்பானது இரண்டு வகையான சேவைகளை வழங்குகின்றது. அவை அனைத்துப் பயனர்களுக்கும் கிடைக்கக் கூடிய நிலையான அமைவிடச் சேவைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்டப் பயனர்களுக்கு வழங்கப்படும் கட்டுப்படுத்தப்பட்டச் சேவைகள் ஆகும்.
- ஏழு செயற்கைக்கோள்களைக் கொண்ட இந்தத் தொகுப்பானது ஒரு பிராந்திய

அமைப்பாகும்.

- இவற்றில் மூன்று செயற்கைக் கோள்கள் இந்தியப் பெருங்கடலின் மேற்புறத்தில் புவிநிலை செயற்கைக் கோள்களாக இருக்கும். அதாவது, அவை விண்வெளியில் நிலையாக இருப்பது போலத் தோன்றும். மேலும் நான்கு செயற்கைக் கோள்கள் புவிசார் ஒத்திசைவாக இருக்கும். இவை ஒவ்வொரு நாளும் விண்வெளியில் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் தோன்றும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஓபிக்தஸ் கைலாஷ்சந்திராய்

- இது வங்காள விரிகுடாவில் காணப்படக் கூடிய ஒரு புதிய விலாங்கு வகை பாம்பு இனமாகும்.
- இந்திய விலங்குகளை வகைப்படுத்துதலில், இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குனரான டாக்டர் கைலாஷ் சந்திரா ஆற்றிய மகத்தானப் பங்களிப்புகளை கௌரவிப்பதற்காக இது ஓபிக்தஸ் கைலாஷ் சந்திராய் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது இந்தியக் கடற்கரையில் காணப்படக் கூடிய ஓபிக்தஸ் இனத்தின் எட்டாவது இனமாகும்.





## யர்ராபுபா பள்ளம்

- யர்ராபுபா பள்ளம் என்பது மேற்கு ஆஸ்திரேலியாவின் மத்திய மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு குறுங்கோள் தாக்கப் பள்ளம் ஆகும்.
- இது ஏற்கனவே ஒரு குறுங்கோள் தாக்கத்தினால் ஏற்பட்ட பள்ளத்தின் அரிக்கப்பட்ட ஒரு எச்சமாகும்.
- சமீபத்திய ஆய்வின்படி, ஆஸ்திரேலியாவின் யர்ராபுபா குறுங்கோள் தாக்கப் பள்ளமானது பூமியில் மிகப் பழமையானது ஆகும் (இதன் காலம் 2.229 பில்லியன் ஆண்டுகள் ஆகும்). மேலும் இது பனி யுகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஒரு

காரணமாக இருந்திருக்கலாம் என நம்பப் படுகின்றது.

- அரிப்பு மற்றும் கண்டத் திட்டு நகர்வின் காரணமாக யர்ராபுபா பள்ளமானது அதன் வயது மீதான நம்பகமான மதிப்பீட்டு காலம் வரையில் நிலைத்துள்ளது.
- மற்ற பழைய குறுங்கோள் பள்ளங்களானவை - தென்னாப்பிரிக்காவின் வ்ரெட்ஃபோர்ட் டோம் (2.023 பில்லியன் ஆண்டுகள் பழமையானது) மற்றும் கனடாவின் சட்பரி பேசின் (1.850 பில்லியன் ஆண்டுகள் பழமையானது) ஆகியவை ஆகும்.
- தற்போது அறியப்படுகின்ற, துல்லியமாகத் தேதியிடப்பட்டுள்ள பிற குறுங்கோள் தாக்கக் கட்டமைப்புகள் இவை மட்டுமேயாகும்.
- புவியியல் சார் அறிக்கைகளானவை இத்தகு தாக்கத்திற்கு முன்பு பூமியானது பனிப் பாறைக் கட்டிகளைக் கொண்டிருந்தது என்பதைக் காட்டுகின்றன. ஆனால் அதன் பிறகு, இந்தப் பனிப்பாறைகள் நூற்றுக்கணக்கான மில்லியன் ஆண்டுகளாக மறைந்து விட்டன.
- இந்நிகழ்வுகளைக் குறித்து சிர்கான் மற்றும் மோனாசைட் போன்ற தாதுக்களில் "சம இயல்புடைய சுழற்சிகளை" பயன்படுத்தி புவியியலாளர்கள் காலத்தைக் கணித்தனர்.
- இந்தத் தாதுக்களில் சிறிய அளவு யுரேனியம் உள்ளது. எனினும் இது படிப்படியாக அறியப்பட்ட விகிதத்தில் சிதைவுற்று ஈயமாக மாறுகின்றது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26

- சமூகம், பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகள் குறித்த செயல்களின் மையமாக இருக்கும் ஒரு நிலையான எதிர்காலத்தை நோக்கிய சுங்கத்தின் பங்களிப்புகளுக்காக இந்த தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்நாளுக்கான கருப்பொருள் - "மக்கள், வளர்ச்சி மற்றும் கிரகத்திற்கான நிலைத் தன்மையை வளர்ப்பதற்கான சுங்கம்" என்பதாகும்.
- இந்தத் தினமானது 1953 ஆம் ஆண்டில் சுங்க ஒத்துழைப்பு மன்றத்தின் (Customs Cooperation Council - CCC) தொடக்க அமர்வு பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற நாளை நினைவு கூர்கின்றது.

- 1994 ஆம் ஆண்டில் CCC ஆனது உலக சுங்க அமைப்பு (World Customs Organization - WCO) என மறுபெயரிடப் பட்டது. தற்போது 179 நாடுகளைச் சேர்ந்த சுங்க நிறுவனங்கள் WCO அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளன.
- சுங்க விஷயங்களை மட்டுமே முன்னிலைப்படுத்தக் கூடிய நாடுகளுக்கிடையேயான ஒரே அமைப்பு என்று இந்த உலக சுங்க அமைப்பு அழைக்கப் படுகின்றது.
- WCO ஆனது சர்வதேச ஒத்திசைவு அமைப்பு முறையிலானப் பொருட்களின் பெயரிடல் மற்றும் சுங்க மதிப்பீடு & அவற்றின் தோற்றம் தொடர்பான விதிகள் குறித்த உலக வர்த்தக அமைப்பு (WTO) ஒப்பந்தங்களின் தொழில்நுட்ப அம்சங்களையும் நிர்வகிக்கின்றது.

# இதரச் செய்திகள்

## ஆக்ஸ்போர்டு அகராதியில் இணைக்கப்பட்டுள்ள புதிய சொற்கள்

- ஆக்ஸ்போர்டு மேம்பட்ட கற்றல் அகராதியின் சமீபத்திய பதிப்பில் இணைக்கப் பட்டுள்ள 26 புதிய இந்திய – ஆங்கிலச் சொற்களில் ஆதார், ஹர்த்தால், தாபா மற்றும் ஷாதி ஆகியவை அடங்கியுள்ளன.
- 86,000 சொற்கள் கொண்டுள்ள ஆக்ஸ்போர்டு அகராதியின் 10வது பதிப்பில் செய்யப் பட்டுள்ள இந்தப் புதிய இணைத்தல்கள் மூலம் இந்திய – ஆங்கிலச் சொற்களின் எண்ணிக்கையானது 384 ஆக மாறியுள்ளது.
- இந்த அகராதியானது 2019 ஆம் ஆண்டுக்கான வார்த்தையாக 'காலநிலை அவசரநிலை' என்ற வார்த்தையைத் தேர்வு செய்துள்ளது.
- ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி என்பது ஆங்கில மொழியின் முதன்மையான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அகராதி ஆகும். இது ஐக்கிய இராச்சியத்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக அச்சகத்தினால் வெளியிடப் படுகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★